செய்தி வெளியீடு எண்:453 நாள் : 02.09.2014

<u>பத்திரிக்கை செய்தி</u>

## ஒப்பந்த பணிகளில் மதிப்புக் கூட்டு (TNVAT) வரியை பிடித்தம் செய்து (TDS) வணிகவரி அலுவலகத்தில் உடனடியாக செலுத்த வேண்டும்

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டப் பிரிவு 13–ன்படி ஒப்பந்தப்பணிதாரர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தப் பணி நிறைவேற்றுதலின் அடிப்படையில் கட்டிடக்கட்டுமானம் மற்றும் கட்டிடப்பராமரிப்புப் பணிகளெனில் (civil maintenance work) 2 சதவிகித வரியும், கட்டிடக்கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகள் அல்லாத ஏனைய பணிகளெனில் 5 சதவிகித வரியும், பணி வழங்குகின்ற தனி நபரோ அல்லது நிறுவனமோ ஒப்பந்தப்பணிதாரர்களுக்கு பணப்பட்டுவாடா செய்யும் பொழுது பிடித்தம் செய்து செலுத்த வேண்டும்.

கட்டுமானப் பணிகள் என்பது புதிய கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள் போன்றவற்றினை நிறுவுதல் மற்றும் அவற்றினைப் பராமரித்தல் போன்ற பணிகளை உள்ளடக்கியது. ஏனையப் பணிகளென்பது கட்டிட உள்ளமைப்புகளை மேம்படுத்துதல். (paneling and interior decoration) மின்சாரம் சார்ந்த பணிகள், இயந்திரங்கள் போன்றவை பராமரித்தல் ஆகியன கட்டுமானப் பணிகள் அல்லாத இதர பணிகளாகும்.

மேற்கூறிய ஒப்பந்தப் பணிகளை நிறைவேற்றுதலின்பொருட்டு ஒப்பந்தப்பணிதாரர்களுக்கு வழங்கும் தனி நபரோ அல்லது நிறுவனமோ

ஒப்பந்தப் பணி நிறைவேற்றியதன் அடிப்படையில், ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் அதற்கும் அதிகமாக பணித்தொகை வழங்கும்பொழுது ஒப்பந்தப் பணிகளின் தன்மைக்கேற்றவாறு மேற்கூறிய விகிதாச்சாரங்களில் வரி பிடித்தம் செய்து அதற்கு அடுத்த மாதத்தில் தொடர்புடைய வணிகவரி சரக அலுவலகத்தில் செலுத்த வேண்டும். சென்னை கோட்டத்தைப் பொறுத்தமட்டில் ஒப்பந்தப் பணி நிமித்தம் வரிபிடித்தம் செய்து செலுத்துவோர் கிரீம்ஸ் சாலை, வணிகவரி கட்டிடத்தில் அமைந்துள்ள மூலவரி செலுத்தும் சரக (TDS Circle) (**தொலைபேசி எண்**: 044-28293476) அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

மேற்கூறியவாறு வரிபிடித்தம் செய்து செலுத்த வேண்டிய தனி நபரோ அல்லது நிறுவனமோ தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி சட்டத்தின் கீழ் பதிவுப் பெறவில்லையெனில், அவர்கள் பிடித்தம் செய்த வரியினை அவர்கள் வசிக்கும் இடம் அல்லது வாணிக தலைமையிடம் எந்த ஒரு வணிகவரி சரக எல்லைக்குட்பட்டதோ அச்சரக அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

எந்த ஒரு தனி நபரோ அல்லது நிறுவனமோ மேற்கூறியவாறு ஒப்பந்தப்பணிகள் நிமித்தம் பிடித்தம் செய்து செலுத்த வேண்டிய வரியினை அவ்விதம் பிடித்தம் செய்து செலுத்த தவற நேரின், பிடித்தம் செய்யப்பட வேண்டிய வரித் தொகையுடன், அதன் மீது ஒரு மாதத்திற்கு 2 சதவிகித வட்டியுடன் செலுத்த நேரிடும்.

ஒப்பந்தங்களுக்கான வரி விதிப்பு முறை குறித்து விரிவாக தமிழ் நாடு வணிகவரித் துறை இணைய தளத்தில் www.tnvat.gov.in தகவல்கள் உள்ளன. மேலும், சந்தேகங்கள் ஏதேனும் இருப்பின் மின் அஞ்சல் cct@tn.gov.in மூலம் அல்லது Call Centre தொலைவேசி எண்கள் (044–28290962, 28290960 or 1802425–1959) மூலமாகவோ நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

கட்டுமான பணி வழங்கும் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மதிப்புக் கூட்டு வரியினை பிடித்தம் செய்து அரசுக்கு உடனுக்குடன் செலுத்தி தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் மக்கள் நலப்பணிகளை சிறப்புடன் செய்ய முழுமையாக ஒத்துழைப்பினை நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்./– க. இராஜாராமன்,
முதன்மை செயலர்/
வணிகவரி ஆணையர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**